DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***

IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No.158/2022
Deposition of Witness for : PW 2

| | |
|---|---|
| Name. | திரு. மதியரசன், காவல் ஆய்வாளர் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 12.11.2025

**எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2021ம் ஆண்டு சூணாம்பேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்தபொழுது 25.06.2021 அன்று புதுப்பட்டு சந்திப்பில் தலைமைக் காவலர்கள் வெங்கடாசலம் மற்றும் கோபிநாத் ஆகியோர்களுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த பொழுது பிஒய்01 எப் 6653 என்கிற இருச்ககர வாகனத்தில் வந்த நபர் எங்களைக் கண்டதும் மேற்படி இருசக்கர வானகத்தை திருப்ப முயற்சித்தவரை மடக்கிப் பிடித்தோம். அவரை பிடித்து விசாரிக்கையில் அவர்தான் எதிரி என தெரியவந்தது. அவருடைய வாகனத்தை சோதனை செய்ததில் சுமார் 35 லி கொள்ளளவு கொண்ட 3 வெள்ளை நிற கேன்களில் திரவம் இருந்தது. அதனை முகர்ந்து பார்க்க கண் எரிச்சல் மற்றும் விஷ நெடியுடம் கூடிய எரிசாராயம் இருந்தது. அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் மொத்தம் 150லி கொள்ளளவு கொண்ட எரிசாரயத்தை மேற்கண்ட காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் 10.15 மணிக்கு கைப்பற்றினேன். பின்னர் கைப்பற்றிய சொத்தில் இருந்து ரசாயண பகுப்பாய்விற்காக ஒவ்வொரு

பிளாஸ்டிக் கேனில் இருந்தும் சுமார் 500 மிலி வீதம் 2 பெட் பாட்டில்கள் என மொத்தம் 6 பெட் பாட்டில்களில் அந்த திரவத்தை நிரப்பி மூடி சீல் வைத்தேன். பின்னர் 10.45 மணிக்கு மேற்கண்ட காவலர்கள் முன்னிலையில் மீதமுள்ள திரவத்தை சம்பவ இடத்திலேயே பாதுகாப்பாக கொட்டி அழித்தேன். பின்பு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட காவலர்கள் முன்னிலையில் 11.00 மணி முதல் 12.00 மணி வரை பதிவு செய்தேன். எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது இருசக்கர வாகனம் மற்றும் எரிசாராய கேன்களை அடையாளம் காட்டினார். **அந்த பகுதி மட்டும் அ.த.சா.ஆ. 3**. பின்னர மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.த.சா.ஆ.5** மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து 12.30 மணிக்கு எதிரி மீது குற்ற எண்.247/2021 பிரிவுகள் 4(1)(aaa), 4(1–A) TN P Act and Transporting and r/w. 6 and 11 R.S. Rules படி **அ.த.சா.ஆ. 6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.** பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட திரவத்தை நீதிமன்ற உத்தரவு பெற்று இரண்டாம் நிலைக் காவலர் அருள் ஆர்ஜ் என்பவர் மூலம் தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பகுப்பாய்வு செய்த வேதியியல் ஆய்வாளர் திரு.பஞ்சாட்சரம் என்பவரை விசாரணை செய்து பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். பின்னர் அந்த அறிக்கையை சட்டம் சார்ந்த மருத்துவர் திருமதி.பராசக்தி என்பவரிடம் கருத்து கேட்டதில் அதில் அட்ரோபின் என்ற நச்சுப் பொருள் கலந்துள்ளதாகவும், அதனை யாரேனும் பருகினால் உயிக்கும், உடலுக்கும் தீங்கு ஏற்படும் என்று கூறினார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 4(1)(aaa), 4(1–A) TN P Act and Transporting and 6 and 11 R.S. Rules படி இறுதி அறிக்கை பதிவு செய்தேன். **சா.பொ.1.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) பிரிதொரு ஆய்வாளர் முன்னிலையில் மீதமுள்ள வழக்குச் சொத்து கொட்டி அழிக்கப்படவில்லை. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் மற்றும் எதிரியிடம் பெறப்பட்டதாகக் கூறும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை சம்பவ இடத்தில் பதியப்பட்டு காவல் நிலையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. அ.சா.1 என் விசாரணையில் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றதாக சொல்லவில்லை. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை நான் கைப்பட எழுதினேன். மற்ற ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்டு காவல் நிலையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் தயார் செய்திருந்தால் மற்ற ஆவணங்களையும் கைப்பட எழுதியிருப்பேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரம், சொன்ன விதத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், அவரிடமிருந்து எவ்வித பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது புள்ளி விவர கண்கிற்காக ஒரு தவறான குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.